True copy
Editor

Registered as a Newspaper at the G. P. O.

# ஜனதர்ம போதினி

ஒன்றே குலமும்
ஒருவனே தெய்வமும்.
"திருமூலர்"

# JANA DHARMA BOTHINY

OR

## NEW JAFFNA

A Monthly Newspaper

"சமன்செய்து சீர்தூக்குங்கோல்போலமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க்கணி."

**சந்தா விளம்பரம்**

| | |
|---|---|
| தபாற்செலவின்றி ௵ ஒன்றுக்கு ரூ. | 1.00 |
| தபாற்செலவுட்பட " " " | 1.25 |
| மலாய்நாட்டிற்கு " " " | 2.00 |

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்
சந்தாப்பணம் முற்பணமாகவே
அனுப்பவேண்டியது.

**விளம்பர விகிதம்**

| | | |
|---|---|---|
| 1 | கலம் முதன்முறை ரூ. | 5.00 |
| ¾ | " " " " | 4.00 |
| ½ | " " " " | 3.00 |
| | " " " | 2.00 |

அடுத்தமுறைகளில் அரைவாசி.
சில்லறை விளம்பரங்களுக்கு முற்பணங்கட்ட வேண்டும்.

புத்தகம்—1, யாழ்ப்பாணம்—தெல்லிப்பழை—பிரமோதூத ௵ தை ௴ (1931 ஜனுவரி.) இலக்கம்—9

## புதினக்குறிப்புகள்

### றேயில்வேக் காட்டின் செயல்

மார்கழி மாதம் 22 ந் திகதி தலைமன்னாரிலிருந்து கொழும்புக்குச் சென்ற புகைரதத் தொடரில் பயணஞ்செய்த துரைச்சானியொருத்தியைக் காட் பலவந்தமாகத் தொந்தரவுசெய்ய எத்தனித்தானென்று குற்றஞ் சாட்டப்பட்டான். சம்பவம் விசாரிக்கப்படுகிறது.

### பட்டினி மரணம்

பேர்பெற்ற வைத்தியரான டக்றர். மெவல் என்பவர் பிரான்சுதேசத்தில் 60 நாட் தொடர்ந்தேர்ச்சியாய் உபவாசமிருந்து மரித்தார். அநேக நண்பர்கள் தெண்டித்தும் அவரைச் சாப்பிடச் செய்ய முடியவில்லை. இவரின் செய்கைக்குக் காரணத்தையறியாது அனேகர் திகைக்கின்றனர்.

### மரம்போன்ற மனிதர்

உலகத்திலுள்ள மற்றவர்களுக்குப் பிரயோசனப்படாத தளர்ந்த மூளையுடன் சோம்பேறிகளாய் அல்லது விருத்தாப்பியராய் மரங்களைப்போல இருப்பதிலும் மரிப்பதே நன்றென டக்றர். சார்ஸ் மேயோ என்பவர் கூறுகிறார்.

### தண்ணீர்ப்பாலுக்குத் தண்டனை

கொழும்பில் ஒருவன் பாலுடன் 100க்கு 46 வீதம் நீர கலந்தபடி விற்றதன்பேரில் அவனுக்கு 75 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

### பெண் நியாயதுரந்தரர்கள்

இலங்கையில் இனிமேல் பெண்களும் நியாயதுரந்தரராக வருவதற்கேற்ற கூட்டங்கள் ஸ்தாபிக்கப்பட்டு அங்கீகாரம்பெற்றனவாக அறிகிறோம்.

### பெற்றோரைக் கொன்ற மகன்

தான் நினைத்தபடி காணியைப் பிரித்துத்தரவில்லையென்ற கோபத்துடன், ஆறு தோட்டாத் துப்பாக்கியால், தகப்பனை கொன்று தாயையுங் கொல்ல எத்தனிக்கும்போது பிடிபட்டான். இவ்வித பாதகரும உலகிலிருப்பதைப் பூமாதேவி எப்படிச் சகிப்பாள்.

### றங்க் பெட்டியில் பிரேதம்

பம்பாயில் பேர்பெற்ற இரத்தின வியாபாரி ஒருவன் கொல்லப்பட்டு றங்குளடைக்கப்பட்டபடி றெயில் பெட்டியிலிருந்தெடுக்கப்பட்டது. இரு துரோகிகள் பிடிக்கப்பட்டனர். இவர்களுள் ஒருவன் வீட்டில் 13,000 ரூபா பெறுமதியான நகைகள் எடுக்கப்பட்டதாம்.

### பூகம்பம்

யாவாதீவில் சென்றமாதம் 30 ந் திகதியுண்டான பூகம்பத்தின்போரால் 90 பேர் மாண்டனரென்பது பரிதாபமான சங்கதி.

சமீபத்தில் யாப்பான் தேசத்தில் தோகியோ நகரத்தக்கப்பால் 40 மைல் தூரத்தில் சம்பவித்த பூகம்பத்தின் காரணமாக, 252 பேர் மரித்ததாகவும், 700 பேர் வரையில் காயமுற்றிருப்பதாகவும், 1550 வீடுகள் அழிந்தும், 4637 வீடுகள் சிதைந்துமிருப்பதாகவுஞ் செய்தியெட்டுகிறது.

### றேயில்பாதையில் மரணம்

சென்றமாதம் 21 ந் திகதி முறட்டு ஸ்டேசனுக்குச் சமீபத்தில் புகைரதப் பாதைவழியே நடந்து சென்றவன் திடீரெனத் தோன்றிய புகைரதத்துள் அகப்பட்டு உடனே மரித்தான்.

### கப்பல்கள் மோதுண்டுடைதல்

சென்றமாதம் 20 ந் தேதி ஒபெறன் என்ற கப்பலும் அக்ரூறஸ் என்ற கப்பலும் தற்செயலாக மோதுண்டு மூன்று நிமிஷத்துக்குள் மூழ்கிய கப்பல் அழிவாய்ப்பட்டது. 40 பேர் வரையில் மாத்திரம் தப்புவிக்கப்பட்டனர். மாண்டோருள் சில விசேஷ மனுஷருமுளராம்.

### கோடீஸ்வரனின் கொடை

மெஸ். எட்வேட் காக்னெஸ் என்ற சீமான் பாடசாலை ஸ்தாபனங்களுக்காக 15 இலட்சம் பவுண் உதவியிருக்கின்றனர். இவர் இதற்குமுன் தருமவழிகளில் 20 இலட்சம் பவுண் செலவழித்திருக்கிறாராம்.

### திருத்தமுறை

ஆங்கில பத்திரிகைக் கூற்றுப்படி இங்கிலாந்தில் மறியற்காரர் தொகை முன்னிலும் அரைப்பங்காகக் குறைந்திருக்கிறது. எத்தனையோ மறியற்சாலைகள் வெறுமையான காரணமாக, அவை வேறு பாவிப்புக்கு விடப்பட்டிருக்கின்றன.

### 50 அடி உயர அலை

பிரான்ஸ் தேசப் பக்கமாக மத்தியதரைக் கடலில் சென்ற தைமாத நடுப்பகுதியில் பெரிய கொந்தளிப்புண்டானது. அலைகள் ஏறக்குறைய 50 அடிக்கெழும்பியதால் கப்பல்கள் அப்பாதை போக முடியாது தியங்கின. அல்சியேர்ஸ் என்ற துறைமுகம் மிகவுஞ் சிதைவுண்டது. இத்துறைமுகத்துக்கு மாத்திரம் 3 கோடி விறுங்ஸ் நட்டமாயிற்று.

### 5000 ரூபா பெறுமதியான ஊசி

கொழும்பு பெரிய ஆஸ்பத்திரியில் சத்திரவைத்திய அறையிலிருக்கும ஒரு கருவியிலிருக்கும் 5000 ரூபா பெறுமதியான ஊசியொன்று காணமற்போயிற்று. இது களவாடப்பட்டதோ அல்லது தேட முடியாதபடி மாறுண்டு வைக்கப்பட்டிருக்கிறதோ என்பது இன்னும் தீர்மானிக்கப்படவில்லையாம்

### ஒற்றைக் கையனுக்கு 6 மாத மறியல்

தங்காலைப் பகுதியில் மாடு களவாடியதாகக் கோட்டின்முன் ஒருவன் கொண்டுவரப்பட்டான். ஒற்றைக் கையனுயிருந்தும் பலரை வாளுக ஊறுபடுத்தியும்விட்டதாக ருசுப்படுத்தப்பட்டது இவன் 6 மாதச் சிறைத்தீர்ப்புப் பெற்றான்.

### ஆச்சரிய நன்கொடை

இங்கிலாந்தில் கோலேறோ பாகத்திலுள்ள றோயல் ஆஸ்பத்திரிக்குள் ஒரு துரைச்சானி புகுந்து அங்கிருந்த லேகிகனிடம் ஓர் தேயிலைப் பார்சலைக் கொடுத்து "இதை ஆஸ்பத்திரிக்குக் கொடுக்கிறேன்" என்று கூறிச் சென்று மறைந்தனள். பார்சலுள் 1600 ரூபா பெறுமதியான நோட்டுக்கள் இருந்தன. உபகரித்தவளின்பெயர் இன்னும் அறிய முடியவில்லையாம்.

### திமிங்கில கோளாறு

40 அடி நீளமுள்ள ஒரு பாரிய திமிங்கிலம், அவுஸ்திரேலியாவின், சிட்னி துறைமுகத்திற்றோன்றி, தோணிகளைக் கவிழ்த்து, நீராவிப் படகுகளின் முன்னணியங்களை உடைத்துப் புரளிபண்ணியது. அதைப் பிடிக்க எத்தனிப்பதற்கு முன் ஓடிமறைந்ததாம்.

### இமயமலைச் சிகாமேறல்

மறுபடியும் இமயமலையின் உயர்ந்த பகுதியை அளாவிப் பார்ப்பதற்கு மெஸ். F. S. சிமித் என்பவரும், வேறு மூவருமாக வருகிற பங்குனிமாதத்தில் ஆரம்பிப்பார்களாம்.

### அரசபெருமான்வீட்டில் மரணம்

காருண்ய அரசரின் சகோதரியும், காலஞ்சென்ற 7 ம் எட்வேட் அரசரின் புதல்வியுமானவ சென்ற தைமாதம் 4 ந் திகதி பிராணுப்தியாயினர். கடந்த சிலமாசங்களாக நோய்வாய்ப்பட்டிருந்தாலும் மரித்தது திடீரென நினையாப்பிரகாரமாகவென என்று அறிந்து துக்கிக்கிறோம்.

### வட்டமேசை

தற்போது லண்டனிலும் தொனிக்கும் வட்டமேசை மகாநாடானது கூட்டப்பட்ட மேசை உண்மையில் வட்டவடிவானதல்ல. முட்டைவடிவமேயுடையது. இது 105 அடி நீளமுள்ளது. மிகவும் அழகாய்க் கொதநுவேலைகளுடன் இதற்கென்றே செய்யப்பட்டது. இதற்கு வேலைத்திறமையடங்கிய 72 கால்களுண்டு.

### முழு ஆசிய ஸ்திரீகள் சங்கம்

இந்தியாவில் லாகூர் நகரத்தில் கூட்டப்பெறும் இந்த விசேஷ சங்கக் கூட்டத்திற்கு இலங்கையிலிருந்தும் விசேஷ ஸ்திரீகள் 8 பேர் வரையில் சென்ற 14 ந் திகதி போயிருக்கிறார்கள்.

### திக்கெற்றின்றிப் பிரயாணம்

சென்றமாதம் இரத்தினபுரிப்பகுதி றேயிலில் ஒருநாட் பிரயாசையின்பலனாய்த் திக்கெற் பரிசோதனைகாரர், 30 பிரயாணிகளைத் திக்கெற்றின்றிப் பிரயாணஞ்செய்த குற்றத்திற்காய்ப் பிடித்தனர் பலநாட் கள்வர் ஒருநாள் அகப்பட்டபோதிலும் பரிசோதனை நாளாந்தம் நடைபெறின் அபராதப் பகுதியார்க்கு நயமுண்டாகுமென்பதிற் சந்தேகமில்லை.

### முழு இந்திய சட்டசபை

புதிதாகத் தெரிவுசெய்யப்பட்டு டெல்லிமாநகரில் சென்ற 14 ந் திகதி கூடிய முழு இந்திய சட்ட சபையில் ஒடுக்கப்படும் மூவர் தம் சாகியத்தவரின் பிரதிநிதிகளாக வழக்கமான விமரிசையுடன் வரவேற்கப்பட்டனர். இவர்களின் உடையும், புனிதமும், எவர் மனதையும கவர்ந்துகொண்டதாய்ப் பத்திரிகை கூறுகின்றது.

### 6 லட்சம் கதவுகள்.

ஒருவருடத்திற்குள் ருஷியாவிலிருந்து (புதிதாகச்செய்யப்பட்ட) ஆறுலட்சம் கதவுகள் புறதேசங்களுக்கு விசேஷமாய் இங்கிலாந்துக்கு அனுபப்பட்டிருக்கின்றன. உள்ளூரிலுள்ள தச்சுவேலைகாரருக்கு இவ்விதம் பிழைப்பறச் செய்யலாமாவென்று, இங்கிலாந்தில் கட்டிடவிற்பன்னருக்கும் மற்றோர்க்கு மிடையில் கொந்தளிப்புண்டாயிருக்கிறது..

### தன் வேலையாட்களுக்குப் பகிர்ந்துவிடல்.

இங்கிலாந்தில் மிஸ் மாக்கிறற் கிறே என்ற ஒரு துரைச்சானி தான் இறக்கும் நேரத்தில், தனது பெரிய தொழிற்சாலையில் சேவைசெய்த யாவர்க்கும், பகிர்ந்து கொடுக்குபபடி பதினுயிரம்பவுண் எழுதிவைத்துப் பிரிந்தார். விட்டுப்போன இவவுடைய முழுச் சொத்தும் ஏறக்குறைய ஒன்றரை லட்சம் பவுணென மதிக்கப்படுகின்றது.

### 76 சதத்துக்கு வழக்கு.

மாத்தளைப்பகுதியில் தனக்கு வரவேண்டிய 76 சதத்தை ஒருவன் பகிரங்கமாகக்கேட்டானென்ற கோபத்தால், கடன்வாங்கியவன் மற்றவனைத் தாக்கநேர்ந்து காயமுற்றனர் வழக்குமாத்தளைப் பொலிஸ்கோட்டில் நடைபெறுகின்றது. சதக்கணக்குப் பிரக்கிராசிமாரிற் செல்லாது.

### லண்டனில் இந்திய ஆஸ்பத்திரி

இந்திய வைத்திய சாலையொன்றை லண்டனில் ஸ்தாபிக்கவும், இதற்கு 12500 பவுண் செலவழிக்கவும் இந்திய நேஷ்மாரையும் இந்திய வைத்தியரையும, அவ்விடம் வைத்து, இந்தியருக்கெனப் பிரத்தியேகமாக்கவும் தீர்மானமாயிற்றும்

### காதலி கொல்லப்படல்

சென்ற மார்கழி மாதம் 1 ந் திகதி, சலாபத்தில் பிஸ்கால் றோட்டருகாமையில் (மேரிஎன்ற ஒரு சிங்கள) இளமங்கையின் பிரேதம் மண்டையுடைந்தபடி கண்டெடுக்கப்பட்டது. அப்பகுதியில் வளமையாய் மூகமதியரின் பாவிப்புக்குரிய உயர்ந்த ஒரு சோடுமிதிதடி பிரேதத்திற்கருகே காணப்பட்டது. இந்தமிதிதடி கொலையாளியை இலகுவிற் காட்டிக்கொடுத்ததாம். பொடிசிங்கோவாகிய இவளின் புருஷனுக்குத் தெரியாதபடி வா. செ. சாயிபு என்ற வாலிப மூகமதியன் இவளுடன் கடந்த மூன்று வருடமாக சிநேகபான்மையாயிருந்ததாகவும் சென்ற கார்த்திகை மாதம் 30 திகதி இரவு இவர்களிருவரும் கதைப்பதைக் கண்ட பொடிசிங்கோ பாரிய பொல்லுடன் ஓடி வந்தபோது மகமதியன் மிதிதடியையும் விட்டோட மேரி பொல்லுக்கிரையானுள் என்ற சங்கதி புலப்படுகின்றது.

### தீக்கிரையான கப்பல்

மார்கழி ௴ 1 ந் திகதி மலாய்ப் பகுதிக்கப்புறம் 30 மைல் தூரத்தில் பஞ்சேற்றிச் சென்ற ஓர் கப்பல் திடீரென்று தீக்கிரையானது. சாமான்களும் வேலைகாரரும் வள்ளங்கள் மூலம் அப்புறப் படுத்தப்பட்டனர். ஆயின் மாலுமியும் கம்பியில்லா தந்தியுத்தியோகஸ்தனும், கடைசி வரையும் கப்பலில் இருந்து விலகவில்லையாம்.

### எம் புதிய தேசாதிபதி

சேர் கிறேம் தொம்சன் K. C. B., K. C. M. G. அவர்கள் வருங்கால கவர்ணராக நியமிக்கப்படிருக்ஞர். இலங்கைக்குச் சித்திரை ௴ வரையில் வருவார். இவருக்கு வயது 55. இவர் 1919 முதல் 1922 வரையில் கொலோனியல் செக்றற்றறியாகவும், சில மாதங்களாக அக்றிங் தேசாதிபதியாகவும் கடமைபார்த்தார். 1922 ம் வருட முதல் 3 வருடம் பிரிட்டிஸ் குயிஞ நாட்டிற்குத் தேசாதிபதியாகவும் பின்பு கடந்த ஐந்து வருடங்களாக, நைஜீரியா தேசத்தின் தேசாதிபதியாவும் இருந்தார். இவர் தொடக்கத்தில் ஓர் கிளாக்காகக் கடமை பார்த்து இவ்விதபதவிக்கு உயர்ந்தார். இவரது குணநிசயங்கள மிகச்சிறந்தனவென்றும், இவர் இலங்கையின் வருங்கால புதிய அரசு முறைகளுக்கு ஏற்ற வல்லமையுடையவரென்றும் பத்திரிகைகள் கூறுகின்றன.

### மாலுமியற்ற கப்பல்

மாலைதீவை நோக்கி வந்த "வெற்றே சாலேம்' என்ற ஓர் சிறு கப்பலின் மாலுமி திடீரென வியாதிப்பட்டு இறந்துவிட கப்பல் நடுச்சமுத்திரத்தில் அக்கப்பாடுபட்டு நின்றது. தற்செயலாய் அப்பக்கமாகவந்த 'குயெறிம்பா" என்ற பிரித்தானிய கப்பல் கிட்ட அணுகிற்று ஒருவர் பாஷையை மற்றவர் அறியமுடியாது கஷ்டப்பட்டாலும் சைகை மூலம் காரியத்தை மட்டிட்டு சிறிய கப்பல் உடைவுபட்டு அமிழ்ந்தும் தறுவாயிலிருக்கும் அத்தருணம் அதிலிருந்து பிரயாணிகளையும், சாமான்களையும் ஏற்றிக்கொண்டு கொழும்புக்கு வந்து சேர்ந்தது.

### வைத்தியசாலை நிதிக்கு 47,000 பவுண் அளித்த பெருமான்

சேர் உவில்லியம் மோறீஸ் என்பவர் ஒக்ஸ்வோட் நகரத்திற் கருகாமையிலுள்ள ஒரு வைத்தியசாலைக்கு 47,000 பவுண் உதவியிருக்கிறார். இப்பிரபு இதுவரையில் ஆஸ்பத்திரிகளுக்காக கொடுத்த பணம் மொத்தம் 364,501 பவுணெனமதிப்பிடப்படுகின்றது.

### குடுமியூசி காட்டிக் கொடுத்தது

குருநாகலைப்பகுதியில் சில காலத்திற்கு முன் விவாகமான ஒரு இளமாது சடுதியாகக் காணமற்போனுள்- பலநாட்சென்றபின் காட்டினுள் ஒரு மண்டையோடும் சில எலும்புகளும் கண்டெடுக்கப்பட்டன அவ்விடத்தில் காணப்பட்ட குடுமியூசிமூலம், காணமற் போனவளின் உடம்பென்று கண்டனர். யாரோ போக்கிரித் துஷ்டர் கையில் அகப்பட்டு அதனுல் லபித்த மோசமென டக்றர் யூகிக்கிறார்.

### 33 அடியடித்த துரைச்சானி

தன் வேலைக்காரியை அநியாயமாக அடித்ததின் பேரில் சிலாபத்தைச் சேர்ந்த லூசியா மதீஸ்பிள்ளை என்பவ 3 மாத கடுமறியலும் 100 ரூபா குற்றமும் குற்றமிறுக்கத் தவறினுல் இன்னும் 3 மாதமறியலும் என்று தண்டிக்கப்பட்டா. அப்பீல் செய்தும் சுப்றீம கோட் நீதிபதி அப்பீலைத் தள்ளிவிட்டார்.

## விசேஷ அறிவிப்பு

பத்திரிகையனுப்பும்படி கேட்கப்படாதிருந்தும் சிலபெரியமனுஷர்களுக்கு எங்கள்பத்திரிகையை ஒழுங்காய் அனுப்பிக்கொண்டிருக்கிறோம். அவர்கள் எங்கள் சாகியத்தவரின் உயர்ச்சியை விரும்பி எங்கள் பத்திரிகையை ஆதரிப்பது வெகுசந்தோஷம். ஆனால் வெகுசிலர் பத்திரிகையை வேண்டாமென்றறிவித்ததுண்டு. பத்திரிகை வேண்டாமென்றெண்ணுபவர்கள் தயவுசெய்து எமக்கு உடனே அறிவிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

பத்திராதிபர்.

# ஜனதர்மபோதினி

பிரமோதூத ௵ மார்கழி ௴

## எமதுபத்திரிகை

Editorial

“தர்மம்ஷீணித்து அதர்மம் வர்த்திக்கும்போது
நான் உலகில் பிரசன்னமாகின்றேன்.”—
ஸ்ரீ கிருஷ்ணர்.

“இழந்து போனதைத் தேடி இரட்சிக்கவே மனிதகுமாரன் வந்திருக்கின்றார்.”
இயேசு கிறிஸ்து.

தேசாபிமானம், அரசியல் ஞானம், சுதந்திரதாகம், காந்தியடிகளின் சத்தியாக்கிரகம், சமூகசீர்திருத்த இயக்கம் முதலியனவெல்லாம் ஒன்றையொன்றுமுந்தி நான், நான் என்று ஆவேசத்துடன் எழுபசும் பொற்சுடர்போல் எங்கணும் பரவி யெழுந்து விளங்குமிக்காலத்தில் நம் “ஜனதர்மபோதினி” ஓர் அன்னையின் திருவடிவு கொண்டு, தற்காலயுகதர்மமாகிய ஜனதர்மத்தை நமது நாட்டினகண் பரப்ப எழுந்தருளியிருக்கின்றாள். இதுவரையும் ஓர் மாசிகையாகத் திங்கள்தோறும் வெளிவந்து பணிசெய்தலாகிய தன்கடனையாற்றிவருகின்றாள். நேயர்கள் பலர் “போதினி”யை ஆதரிக்கமுன்வந்திருப்பதை யறிந்து மகிழ்வெய்துகின்றோம். எனினும், போதினியின் மழலை மொழிகளைப்பாகித்துணரும் திறனற்றோர் பலர் நம்மிடையுமுண்டு. அது பற்றி, இரண்டோர்வார்த்தை “ஜனதர்மபோதினி”யின் விளக்கவுரைகளாக ஈண்டு தருகின்றோம்.

ஓர் நாட்டின் முன்னேற்றத்திற்கு அவசியமான இயக்கங்கள் பலவற்றுள்ளும் பத்திரிகைகளின் பிரசாரமே முதன்மையானதாகும். ஒரு நூற்றாண்டுக்குமுன் வரையில் அஞ்ஞானதிசையில் — வெளியுலகம்மதிக்காத நிலையில் வீழ்மையுற்றிருந்த அமெரிக்க ஐக்கிய மாகாணம் யப்பான், சீனமுதலிய தேசங்கள். நவீன நாகரீக வளர்ச்சி, தேசீகமுதற்போக்கு முதலிய பலதுறைகளிலும் முன்னேறி உலகிலுள்ள வல்லரசுகளுள் அவைகளுமொவ்வொன்றாகத் திகழ்வதற்கு முதற்காரணமாயுள்ளது தேசத்தில் ஏற்படுத்தியுள்ள பத்திரிகைப்பிரசாரமேயென்று கூறவேண்டியதில்லை. மேல் நாட்டுக்கலைகள் முழுவதும் பத்திரிகை வளர்ச்சியில் பொதிந்துள்ள தென்னல்மிகையாகாது. மேனாட்டுக்கலைகள்வளர்வதற்கும் வழர்ந்தகலைகள் பிறநாடுகளில பரவுவதற்கும் பத்திரிகைகளே துணைக்காரணங்களாகவும், தோன்றுக்காரணங்களாகவுமுள்ளன. ஆங்கிலத்தில் “பத்திரிகை படியாதான் பித்தன்” எனும்பழமொழியுண்டு.

நமது நாடாகிய யாழ்ப்பாணத்தில் ஒரு சில புதினப்பத்திரிகைகளே சென்ற சில வருடங்களாக வெளிவந்திருக்கின்றன. அவைகளும் சாதிசமயச்சார்புடையனவாய்த் தங்கடனாற்றி நாட்டிற்குநலன் செய்துவருகின்றன. தற்போது அவைகளாற்றி வருந்தொண்டின் பயனைப் நமது நாடடைந்திருக்கும் பேறு ஓரளவினதன்று. எனினும் நாட்டின் கலைவிருத்திபண்ணத்தக்க பத்திரிகைகள் போதியனவில்லையென்றே முறையிடவேண்டும் — தற்காலநிலைக்குத்தக்க பத்திரிகைகள் பலவெளிவரல் வேண்டும். நமது நாடு ஓர் செந்தமிழ்நாடு. பண்டைநாகரிகச் சிறப்புப்பெற்ற தமிழரின் நாடே நம்யாழ்ப்பாணநாடு. அந்தோ தற்போது “பாமராய் விலங்குகளாய் உலகனைத்தும் இகழ்ச்சி சொல” வேண்டி வந்திருக்கின்றது. தற்காலத்தமிழகம் சாதிமத பிளவுகளால் நலமிழந்து, நிலைகுலைந்து மனிதனை மனிதன் விலக்கிவைத்திருக்கும் சமூகப்பழக்கவழக்கங்களால விலங்கிடப்பட்டிருக்கின்றது! பொதுச்சனங்களின் உணர்ச்சியின்மையும், சமத்திரன்களின் வறுமையும், படித்தவர்களின் பராமுகமும், பணக்காரர்ன்சுயநலமுமே கேட்டிற்கெல்லாம் காரணங்களாகும். இத்தகையகேவல நிலையினின்றும் மக்களை விடுதலையடையச் செய்யும் பலதிறப்பட்ட பத்திரிகைகளும் பத்திரிகையை ஆதரிக்கும் மகான்களும் வெளிவந்துழைத்தல் நமது நாட்டிற்கோர் கௌரவமேயாகும்.

நமது பத்திரிகை ஓர் சிறந்த உயரிய இலட்சியத்துடனேயே “ஜனதர்மபோதினி” என்ற தலையங்கத்துடன் வெளிவந்திருக்கின்றது. மனித சமூக உயர் இலட்சியமே அதன் கொழுக்கொம்பு. நமது நாட்டு மக்களின் வாழ்க்கை நிலையைப் பண்படுத்தவே “ஜனதர்மபோதினி” ஓர் மாசிகை ரூபமாக அவதரித்திருக்கின்றாள். இதனை எழுதும்போது, “தர்மம்ஷீணித்து அதர்மம் வர்த்திக்கும்போது நான் உலகில் பிரசன்னமாகின்றேன்” என்ற உபநிடத வாக்கு மனதில் கண்தோன்றுகின்றது. எற்றகாலத்தில் நமது அன்னை, நன்மக்கள்யாவரின் உள்ளத்திடை அத்துவிதமாய் விளங்கும் ஜனதர்மத்தையே தனதரியாசனமாய்க் கொண்டு, சத்தியாக்கிரகம், அறவொழுக்கம் தெய்வநீதி யென்ற முக்கொற்றக்குடையின்கீழ், தனது உயரிய இலட்சியங்களுடன் “ஜனதர்மமே ஜெயம்” எனமுரசொலிக்க, தேசத்தொண்டில் முனைந்து நிற்கின்றாள். அவள் வரவு நல்லவரவாகுக!

சமூக உயர்குணங்களைவளர்ப்பதினாலேயே கூட்டுறவுண்டாகுமென்றும, அக்கூட்டுறவே மனிதர் பரிபூரணமடைவதற்குமுக்கிய சாதனம் என்றும் கவிச்சக்கரவர்த்திதாகூர் கூறிய உண்மைமொழி, ஜனதர்மபோதினியின் உயரிய நோக்கைக் குறியீடு செய்து நிற்கிறது. தற்காலத்திலுள்ள சகல சாஸ்திரங்களுக்கும், அரசியல் முறைகளுக்கும் மையச்சத்தாய் விளங்குவது சமூககூட்டுறவு ஞானமேயாகும். சகல ஸ்தாபனங்களும் சங்கங்களும் தற்போது சன நாயக தர்மத்தை ஈர்த்துச் செல்வது ஜனதர்ம ஒழுங்கேயாகும். சன நாயகதர்மத்தையும் சமூக உயர்குணங்களையும் நமது நாட்டிலும், நிலைப்படுத்தவே ஜனதர்மபோதினி பிரசன்னமாகியிருக்கின்றாள்.

நம் நாட்டு ஏழைமக்களின் வாழ்க்கை நிலையைப்பண்படுத்தி, அன்னோரின் வாழ்க்கையை இன்பவாழ்க்கையாக்கும் கைங்கரியங்களில் ஈடுபட்டுழைப்பதே இப்பத்திரிகையின் சிறந்த இலட்சியங்களுள் ஒன்றாகும். ஒடுக்கப்படும் மக்களின் வாழ்க்கையை நன்நிலைப்படுத்த எடுக்கும் பிரயத்தனங்கள் யாவுஞ்ஜனதர்மத்தின் பாற்பட்டதே. ஏனெனில், சனசமூகம் முழுவதும் ஒன்றுதிரண்ட ஒருபொருளே. மனிதன் இயற்கையில் ஓர் தனித்தவனல்லன். ஒவ்வோர் மனிதனும் சனசமூகத்தில், ஓர் சங்கிலியில் தொடுக்கப்பட்ட வளையங்கள்போன்று, ஒவ்வோர் கூறாக விளங்குகின்றான். இவ்வுண்மை தற்போதுள்ள இராச்சிய முறைகளிலும் தெளிவாய்த்துலங்குகின்றது. சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம், என்பன யாவருக்கும்பொது. ஒருதேசத்தின் அல்லது ஒரு நாட்டின் வாழ்வு, அந்நாட்டில் வதியும் ஒவ்வோர் மனிதனின் வாழ்வைப் பொறுத்திருக்கிறது. ஒரு நூறு மனிதர் வாழுமோர் கிராமத்தில் ஓர்மனிதன் அறிவு, செல்வம், நாகரீகம முதலியவற்றில் கேவல புருடனாயிருப்பானாயின், மற்றைத் தொண்ணூற்றொன்பதுபேரின் வாழ்க்கை நிலையும் அவ்வளவினதே. ஏனெனில் மனிதன் தனித்தனியாய் எண்ணப்படாமல், ஒன்று சேர்த்து ஓர் மனுக்குலமாய்க்கவனிக்கப்படுகின்றான். இவ்விதஞானமேஜனதர்மமாகும். ஜனதர்ம ஞானத்தைக்கொண்டே உலகியல் தற்போது அளக்கப்படுகிறது. நண்பர்களே, ஒரு நூறு வளையல்களையுடைய சங்கிலியிலுள்ள ஓர் வளையலில் துருப்பிடித்திருந்தால் அச்சங்கிலியின் பெலம் எவ்வளவினது என்பதை யூகித்துப்பாருங்கள். தொண்ணூற்றொன்பது வளையல்களும் ஓர் துருப்பிடித்தவளையலின் பலத்தில் தங்கியிருக்கவில்லையா? அவ்விதமே மக்கள் நிலையுமிருக்கின்றதென்பதைச் ஜனதர்ம ஞானத்தைக்கொண்டு கணக்கிட்டுக் கொள்ளுவோமாக.

நம்போதினி யாழ்ப்பாண நாட்டு ஏழைமக்களின் வாழ்க்கையை மாத்திரமன்று தன்னகத்துக்கொண்டிருக்கின்றது. கடவுள் உலகில் வாழும் ஒடுக்கப்படும் சகல தொழிலாளரையும் நம்போதினி தன் நினைவில கொண்டிருக்கிறது. இழந்துபோன ஜனதர்மத்தைக்கண்டுபிடித்து ஏழைமக்கள் தற்போது அடைந்திருக்கும் ஒடுக்கப்பாட்டிலும் சிறைக்கூடத்திலுமிருந்து விடுதலை செய்து, நாட்டை இன்பவாழ்க்கையில் வைப்பதே நமது பத்திரிகையின் இலட்சியமாகும். ஒடுக்கப்படும் ஏழைமக்களின் வாழ்க்கையை இன்பவாழ்க்கையாக்க முற்பட்டுழைக்கும் மனிதர் யாவரும் தெய்வமக்களேயாவர். ஆண்டவனே ஏழைமக்களின் பணியாளனாக நின்றுழைக்கின்றான். பணியாளனைப் பண்படுத்தும் சேவையிலும் ஈடுபட்டிருக்கும் இறைவனைத் தரிசிக்க விரும்பும் பெரியோர் ஜனதர்ம வழியரே. அன்னவர்க்கே ஆண்டவன் தரிசனைகிடைக்கின்றது. காந்தியடிகளை மகாத்துமாவாக்கிய ஜனதர்மபோதம் எம்மையும்—எம்நாட்டையும் அந் நிலைப்படுத்துவதாக. ஜனதர்மமேஜெயம். ஜனதர்மபோதினி நீடூழிவாழ்க! வாழ்க!! வாழ்க!!!

## எமது வாழ்த்து

இதுமுதல்எங்கள் சங்ககாரியஸ்தர் சபை நியோகித்தபடி, தேசத்தொண்டே தெய்வத் தொண்டெனக்கருதி நம் நாட்டின் நலனையும் நம் நாட்டின் கண் வதியும் ஒடுக்கப்படும் தமிழரின் இன்ப வாழ்வையும் மனத்திடை கொண்டவனாய், எம்மைத் தடுத்தாட் கொண்டருளியிருக்கும் இறைவன் திருவருளை முற்பட்டு எம் கடனை ஜனதர்மபோதினியின் வாயிலாக நிறைவேற்ற ஒப்புக்கொள்ளுகிறேன். அத்துடன் கசடறக் கற்ற மகா கலைஞரும், “அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோடைந்துசால பூன்றிய தூண்” என விளங்கும் இலங்கைத் தமிழர் சிரேஷ்டரும், தெய்வீக தன்மை வாய்ந்த மகாத்துமாவும், வித்தியா கழகத்தலை சிரேஷ்டரும், எம் சங்க அதிபருமான மகா பூச்சியதைக்குரிய கண்ணியம்பெற்ற நெவின்ஸ் என்னும் செல்வத்துரை மகனுக்கும், அவருடன் எமது சாகியத்தவர்க்காகத் தம்மை அர்ப்பணஞ் செய்தவரும், ஒடுக்கப்படுமேழை மக்களின் ஊழியரும், எமது நண்பரும் ஆசிரியரும் சிற்பசாஸ்திர அறிஞரும், தமது உடல் பொருள் ஆவி மூன்றினையும் ஒடுக்கப்பட்டவருக்கு வேண்டிய நன்மைகளைப் புரிந்துவரும் எங்கள் பத்திராதிபருமாகிய திருவாளர் யோவேல்போல் அவர்கட்கும் எமது மனமுவந்த வந்தனையைச் செலுத்தி இப்பத்திரிகையின் பத்திராதிபராக எம்மைத் தியாகஞ்செய்கின்றோம்.

புதியபத்திராதிபர்.

## புதிய அரசாங்க சபைத் தெரிவு,

தென்மாட்சி வலிகாமங்கிழக்குப் பிரிவுகளையடக்கிய வடமாகாணமத்திய பிரிவுக்குத் தற்போது சட்டசபை அங்கத்தவராக இருக்கும் கௌரவ ஸ்ரீமான் சு. இராசரத்தினம் அவர்கள் சமீபத்தில் நடைபெறவிருக்கும் புதிய அரசாங்க சபைத்தெரிவில் வலிகாமம் வடக்கு வலிகாமம் கிழக்கு என்னும் இருபிரிவுகளையுமடக்கிய காங்கேசன்துறை தெரிவுப்பகுதிக்குப்பிரதிநிதியாக வரும் நோக்கத்துடன் முன்வந்திருக்கின்றார்.

## சுயராட்சியமும் விடுதலையும்.

சென்ற மாச நடுக்கூற்றில் வட்டமேசை மகாநாடு முடிவடைந்தது. கடைசியான நாளில் எங்கள் பிரதம மந்திரியவர்கள் வட்டமேசைப்பிரதிநிதிகட்கு இனிய மொழியில் நீண்டதோர் அபிப்பிராயமுடிவை வெளியிட்டார். அதின்படி இந்தியாவிற்குச் சுயராட்சியங் கொடுக்கப்பட்டாயிற்று என்பேம்.

இந்திய கங்கிரஸ் கூட்டம் விரும்பியதும் இன்னும் விரும்பி அழுவதுமான சுயராட்சியம் மற்றோர் அரசுக்குக்கீழடங்கியிராத பூரணசுயராட்சியமே. ஆனால் இப்போது கொடுக்கப்பட்ட சுயராட்சியமோ இந்தியாவது வேறெவராவது காத்திராத அளவான பொறுப்புக்களை இந்தியர்கள் பெற்றுக்கொண்ட குடியேற்ற நாட்டுக்குரிய அந்தஸ்து என்பேம். கங்கிரஸ்காரரின் சுயராட்சியம் இந்தியாவுக்கு அருளப்படவேமாட்டாதென நாம் முன்குறித்ததை மறுபடியும் நினைப்பூட்டுகிறோம். கங்கிரஸ் சுயராட்சியங் கேட்டுநிற்க மிதவாதிகள் குடியேற்ற நாட்டு ஆட்சிகேட்க ஸ்ரீ மக்டனல்ட் மந்திரியார் வெளியிட்ட ஆட்சிமுறை குடியேற்ற நாட்டு ஆட்சிக்கு ஆயத்தப்படுத்தும் முறை யாதலினாலே இதைக் குடியேற்ற நாட்டு ஆயத்த முறையாக எனவுஞ்சில பத்திரிகைகள் கூறுகின்றன.

இப்போ இந்தியாவானது மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டுவிட்டது. அங்குள்ள சட்டசபை கவர்னர்மாரைக் கொண்டதாகும். ஆங்கில கவர்னர்மாரும் கவர்னர் ஜெனரலும் இந்தியாவை ஆளுவார். மாகாண சபைகளுடன் மத்திய சபையுமொன்று உண்டாகும். தெரிந்தெடுக்கப்பட்ட சபை அங்கத்தவருள் இருந்தே மாகாண மந்திரியார் தெரியப்படுவார். இது இலங்கை மந்திர சபைத் தேர்தலுக்கு மாறுபடாதது.

படைகள் இந்தியராய் இருக்கவேண்டுமென்பது இனிமேலே பயக்கப்படவேண்டியதெனும் முறையில் இருக்கிறது. பணவிஷயமும் இன்னும ஒருமுடிவான திருத்தியான முறையில் முடிவுக்கு வரவில்லைப்போலும். இதைவிட “வகுப்புவாத” மெனுங் கொடிய சண்டாளன் “பாதுகாப்பு” என்னும் விஷயத்தை வட்டமேசையிற் நிட்டப்படுத்தி விட்டான். இந்தியாவிற் குறைந்தகட்சியினரும் பெலங்குன்றிய பகுப்பினருமுளர். இவர்கள் காரியம் பெலக்கும் வரை இவர்கட்குப் பாதுகாப்பு முறை அமைக்கப்பட்டிருக்கிறது. இந்துக்களுக்கும முஸ்லீம்களுக்கும் “மூக்குள்ளவரை சளிபோகா” தென்றபடி ஒவ்வாமை ஒருபோதும் நீங்காது. சிறுபான்மையினரும் தனித் தொகுதியினரும், பெரும்பான்மையினரையும், வனையோரையும் நம்பவேகம்பார்.

இந்தியரிடை நிலவும் பிழப்பு பிறப்பாற்சிறிது பெரிது தீண்டாமையாதியனவும் வினைகள் நிகழ்ச்சியில் ஒழியா. இவை ஒழியாதிருக்கும் வரை பாதுகாப்புமுறை நிலைக்கும். பாதுகாப்பு முறை யென்பது பிரத்தானியரின் பாதுகாப்பேயன்றி ஒடுக்குவோர் பாதுகாப்பல்ல. ஆகவே பாதுபாபு முறையை இந்தியரிற சிறுபான்மையோர் அபேட்சிக்கும்வரை சுயராட்சிய அபேட்சை பூரணமாகாதாம்.

எந்நாட்டிலும் வகுப்பு வாதமுண்டு. ஆயின் வகுப்பு வாதமூலம் தீண்டாமை முதலிய வீண்கொடுமைகள் மறுநாட்டில் எங்கும இல்லை. அரசியலில் ஆட்சிமுறையில் வகுப்புப்பிணக்குகளையும் மதபேதங்களையும் நுழைத்தலாகா. எனினும் வகுப்புப்பித்தும் மதப்பித்துந் தேனுப்பாலும்எனக் கொண்ட பதவேட்கையே அரசியலெனக்கொண்ட இந்தியாவில் “பாதுகாப்பு” என்னும் விஷயம் இல்லையேல் நீதி நடைபெறாது. ஆகவே மக்டனல்ட் அறிக்கையெனுஞ் சுயராட்சிய அறிக்கையை மெச்சுகிறோம்.

மேலும் ஸ்ரீ மக்டனல்ட் அறிக்கை வெளிவந்ததும் கங்கிரஸ்காரர் தமது அறிக்கை வெளியிடுவதை அறிந்த ஸ்ரீ சாஸ்திரிகள ஜேர் சப்ரூ, ஜயகர் என்னும்மூவரும் தாம் வரும் வரை அவ்வறிக்கையை வெளியிடவேண்டாமெனத் தந்தி மூலங் கேட்டுக்கொண்டதை ஒப்புக்கொண்டு அவர்கள் வருகையை எதிர் நோக்குவதாகக் கங்கிரஸ் கமிற்றி அறிவித்தது. அப்பால் சென்ற 24ந் திகதி இந்தியா பிரதி காவலாளர்கள் மகாத்துமா உட்படச்சட்டமறுப்பு மறியற்காரர் சிலரை விடுதலை பண்ணும்படி உத்தரவிட்டனர். அதன்படி 26ந் திகதி மகாத்மா சிறையினின்றும் நீங்கினர்

சிறை நீங்கியபின் மகாத்துமா அவர்கள் சொன்னவைகளிலிருந்து மும்மூர்த்திகள் இந்தியா சேர்ந்ததும் கூடி ஆலோசித்துத் தமது பதினொரு தீர்மானங்கட்கிசைந்த ஆட்சிமுறையைத் தற்போதுள்ள குடியாசு முறைக்குத்திருப்பி திருத்தி யமைப்பதிற் திருப்தியடைவார் போலவுந்தோன்றுகிறது. காந்தியடிகள் தேசபக்தர் விடுதலையோ கங்கிரஸ்காரர் விடுதலையோ தமது விடுதலையோ விடுதலையெனககருதார். தேச விடுதலையே அவர் விடுதலை யெனக்கருதுவது. ஆகவே இந்தியாவுக்கு விடுதலையெனில் அது சிறுபான்மையோரான ஏழை மக்களின் விடுதலையிலேயே தங்கி நிற்கின்றதென்பது அவர் கருத்தாகும். அவ்வேழை மக்களின் துயர நீக்கமே காந்தியடிகளின் துயர் நீக்கமுமாகும். ஏழைமக்களின் பாதுகாப்புப் பிரித்தானியரின் கையில் இருப்பதால் இதனிந்தியரின் விடுதலையல்ல. காந்தியடிகள் மறுபடியுஞ் சிறைக் கூடம் புகுவது இந்தியமக்கட்கழகல்ல. ஆகவே யாழ்ப்பாணத்தில் காந்தியடிகள் விடுதலை, தேசபக்தர் விடுதலை, என்றமட்டுந் திருப்தியடையும் மேன்மக்கள் ஏழைமக்கள் விடுதலையென்னும் பெருங்காரியத்திற் தம் மனதைச் செலுத்துபடி கேட்கின்றேம். மகாத்மா ஒருவராயல்லப் பல மகாத்மாக்கள் உண்டாகுங் காலத்தையும் ஏழைமக்களின் விடுதலையையும் எதிர்பார்க்கிறோம்.

யாழ்ப்பாண ஏழைமக்கள் விடுதலைக்காகப் பாடுபடும் மகாத்மாவையும் எதிர்பார்க்கிறோமா? எங்கள் ஊழிய சங்கத்தில் ஒத்துழைத்து ஏழைமக்களின் விடுதலைக்காய் வேலை செய்யாதபடி தேசத்தொண்டர் கழுத்தை உள்ளே இழுத்துப் பதமையாய் இருப்பது வெட்கமாகும்.

J. P.

## அல்வை வடக்கு
## அரசடி விநாயகர் ஆலயத்தில்
## விநாயக சட்டிவிரதம்

மேற்குறித்த ஆலயம் பருத்தித்துறையைச்சார்ந்த அல்வை வடக்கு என்னுங் குறிச்சியில் அமைக்கப்பட்டுளது. ஆங்கு அக்குறிச்சியின் மள்ளர்களாற் பல்லாண்டுகளாகப் பிரமகுலத்துதித்தவர்களைக்கொண்டு நித்திய பூசையும், விசேட காலங்களில் விசேட பூசைகளும் நிகழ்த்துவிக்கப்பட்டு வருகின்றன. இன்னும் ஷை விநாயகர் ஆலயத்தில் விநாயகசட்டி, திருவெம்பாவை, சிவராத்திரி, விநாயக சதுர்த்தி, கந்தசட்டி, முதலாம் விரதங்கள் அவ்வூர் மள்ளர்குல ஆண்பெண் மக்களானும் அயல்நாட்டினரானும் முறைப்படி அனுட்டிக்கப்பட்டு வருகின்றன. இக்காலங்களில் அவ்வவ் விரத மான்மியத்தை விளக்குதற்காய்ப் புராண படனஞ் செய்தல உபந்நியாசஞ்செய்தல் முதலியனவும் சூரசம்மாரம், சூர சம்மாரம் என்பனவும் நிகழ்த்தப்படடு வருதல் வழக்கம்.

வழக்கப்படியே இந்த யாண்டினும் கார்த்திகைமாதம் இருபத்தோராம்நாட் சனிவாரத்தன்று விநாயகசட்டிவிரதம் ஆரம்பிக்கப்பட்டது. அற்றைநாளில் அநேக ஆண்பெண் அடியார்கள் விநாயகப் பெருமானின் அருட்பிரசாதம் வேண்டி விதிப்படி தத்தங் கைகளிலே திருக்காப்பிடுவித்து விரதத்தை அனுட்டிக்கத் தொடங்கினர். அன்று தொட்டு விரத தினங்களாகிய அடுத்த இருபத்திரண்டு தினங்களிலும் அப்பகுதியில் உள்ளார் மற்றைக்காலங்களிலும்பார்க்க ஆசாரசீலராய் ஆலயஞ்சென்று ஆங்கு நிகழும் புராண படனத்தைக் கேட்டும் பூசா கிருத்தியங்களைக்கண்டு துதித்தும் விநாயகப்பெருமானின் அருட்பிரசாதம் பெற்றுத் தத்தம் இல்லங்கட்கு மீண்டனர்.

இனி இக்காலங்களில இடையிடையே சிறந்தமேள வாத்தியகாரர் அழைக்கப்பட்டு வாத்தியஞ்செய்பவும் சங்கு, சல்லரி, சேமக்கலம் என்பன முழங்கவும், சிறுவர்கள் பசனைபாடவும் அடியார்கள் ஐங்கானை விழித்து விழித்து அருண்மொழிகள் பகரவும், தூபதீபங்கள் கமழவும், குடைகள் துலங்கவும், சாமரை இரட்டவும், பக்தர்கள் ஆனந்தக்கண்ணீர் உகுத்து ரோமஞ்சிலிர்ப்பவும், விநாயகப்பெருமான் எழுந்தருளிச் சப்பரமஞ்சத்திவர்ந்துவா வீதிவலஞ் செய்யப்பட்டபின்னர் தினந்தோறும் நிகழ்வது போல் விபூதி, சந்தனம், குங்குமம், வில்வம், தீர்த்தம், தாம்பூலம், பழவர்க்கம் என்பனவும் ஏனை நிவேதனப் பொருட்களும் யாவர்க்கும் வழங்கப்பட்டன. பின்னர் வழக்கப்படியே இருபத்திரண்டாம்நாள் மேலே குறித்த பல வாத்தியங்களுடனும் ஏனை நிகழ்ச்சிகளுடனும் விநாயகப்பெருமான் விமானத்தெழுந்தருளிவர விரதானுட்டானிகளின் திருக்காப்புக்கள் களையப்பட்டு அக்குறிச்சிக்கு வடபால் பாக்குநீரிணையிற் கொண்டு சென்று இட்டுத் தீர்த்தமாடப்பட்டது. தீர்த்ததிற்குச் செல்லும்போதும் தீர்த்தமாடி வரும்போதும் அவ்வவ்வீதியில் உள்ள மாந்தர் தத்தம் இல்லத் தலைவாயில்தோறும் பந்தரிட்டு அலங்கரித்துப் பூரண கும்பங்கள் அமைதது விநாயகப்பெருமானுக்குப் பட்டு இட்டும் அருச்சனை புரிந்தும், தேவார திருவாசக, திருப்புராணமாதியவற்றைப் பக்தியோடு ஓதியும், பலவாறுகப் போற்றித் துதித்து அருளமுதம் பெற்றனர்.

ஈற்றில் விமானம் ஆலயமுன்றிலை அடைந்ததும் யாவரும் ஆநந்த பாவசராகி 'அரோகர" என்று பேரொலி செய்யவும் மங்கள வாழ்த்தொலி இசைக்கவும் விநாயகப்பெருமானைச் சன்னிதானத்திற்கு எடுத்துச்சென்று பூசனை யாவும் நிறைவேற்றி விபூதி முதலாஞ் சின்னப்பொருட்களும் தாம்பூலம் முதலாம் நிவேதனப்பொருட்களும் வழங்க யாவரும் பெருவகையோடு தத்தம் இல்லங்கட்குச் செல்வாராயினர். ஆயின் வழக்கப்படியே இருபத்தோராம்நாட் சட்டிததினத்தன்று நிகழும் கயமுகாசுர சம்மாரம் இவ்யாண்டில் நிகழ்ந்திலது. இனி இவ்வாலயமேயன்றி இன்னுமிரு ஆலயங்கள் அக்குறிச்சியிலேயே முன்னோரான் அமைக்கப்பட்டு நம்மவர்க்குப பக்திச்சுவை யூட்டுதல் யாம் புரிந்த முன்னைத்தவப்பயனே.

இங்ஙனம்
ஓர் பள்ளன்
அல்வை வடக்கு.

---

## மதிப்புரை

"சைவபரிபாலனம்" எனும் மாதச்சஞ்சிகையின் பத்தாவதாண்டின 12வது இலக்கப்பிரதி வரப்பெற்றேம். இது "பிராமணரலாதார்" கட்சியினரால் "சைவமதத்திற்கும் பொதுஸ்தானங்கட்கும்பொதுஜனங்கட்கு" மென வெளிவருவது, திருச்சிபொன்மலையிலிருந்து வெளிவரும் இதன் மூகப்பில் "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" "அன்பேதெய்வம், தெய்வம் இகமேல்" என்பன துலங்குகின்றன.

"ஒன்றுபட்டாலுண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கிடிலனைவர்க்குந் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல்வேண்டும்---இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெதுவேண்டும்."

என்பது இவர்கள் தெளிவு---தமிழர் எனுஞ் சாதிக்கும் பிராமணருக்கும் யாதும் ஒற்றுமையின்மையால் பிந்தியவராற் பிரிக்கப்பட்ட தமிழர் உணர்வடைந்து ஒற்றுமைபட்டால் உண்டு வாழ்வு எனும் உணர்ச்சியை உண்டுபண்ணும் புதியபத்திரிகைகளிலிதுவுமொன்று என்னும் மதிப்பால்எமது பத்திரிகையை மாற்றுப் பிரதியாய் அனுப்பிவரத்தீர்மானித்தோம்.

---

## மதிப்புரை

### சாதித் தாயின் சிலப்போலி

அறமொழுகு மருங்கருத்துக்களை வரிவடிவிற் கொண்ட இசைபடக்கமான நூல :—சாதி வழக்கின் தீங்கினை மேலெழும்பி அவற்றால் மக்களுநும் சீர்கேட்டை அறமுறையில் ஓரி—சீர்கேடான சாதிவழக்கை வளர்த்துவரும் நாடுகளை முறைபடக்காட்டி அறிவுறுத்துவது இந்நூலின் போக்குபண்டை யுரையாசிரியன் மாருரையினை யொப்பநறுந் தமிழில் எழுதப்பட்டதோடு கண்கவர் வனப்பினதாய் அறிஞர்கள் வாழ்த்தும் முறையில்மைந்துளது.

இதனாசிரியர்
வேலணை திரு. சி. சரவணமுத்தவர்.
விலாசம்
திரு. சி. சரவணர்
விவேகானந்த சபை
மேட்டுத் தெரு
கொழும்பு

---

## கொழும்பு சைவமங்கையர் கழகம்

கொழும்பிலுள்ள சைவப்பெண்கள் சங்கமானமேற்படி கழகம் தைமாசம் 18ந் திகதியன்று வெள்ளவத்தை சம்பங்கோட்டார் கோவில் மண்டபத்தில் கூடிற்று. அந்தவேளை மாசாந்த கூட்டங்களிற் பேச விரும்பும் அங்கத்தவர்கள் கழககாரியஸ்தருக்கு தமது விருப்பத்தை அறிவிக்க வேண்டுமெனவும், ஒவ்வோர் ஞாயிறு பின்னேரங்களிலும் இதிகாசங்களும் மார்க்கமும் படிக்கும் வகுப்புகள் கூடவேண்டுமென்றும் விசேஷதிறம் பெற்றமாணவிகட்கு உபகாரங்கள் வருடாந்தம் வழங்கப்படவேண்டுமென்றும் தீர்மானமாயது.

இன்னும் மாசிமாதம் 2ம் திகதி வறியவர்களுக்கு தைப்பொங்கல் உபசாரணையாக விருந்து கொடுக்கும்படியும் தீர்மானமாயது. அவ்வேளை கனம். F. A. கிங்ஸ் பரிபாதிரியார் அவர்கள் திருவள்ளுவரையிட்டு விசேஷ உரை புகழ்த்தியதுடன் மேற்படி தூரவர் அவர்கள் தாம ஞாயிற்றுக்கிழமை தோறும் பின்னேரம் 4 மணிக்கும் 6 மணிக்குமிடையில் சைவமங்கையர்க்குப் பாடங்கற்பிக்கவுஞ் சம்மதித்துள்ளார்.

சைவமங்கையரென்பதில் யாழ்ப்பாணத்திற்போல ஆங்கு குல மார்க்க ஆசாரங்கள் தான் சைவமங்கையர் சிறப்பெனமயக்குறுவண்ணமும் சைவமங்கையர் கலாசாலையும் கழகமும் யாழ்ப்பாணத்தில் உயர்குல சாலையுங் கழகமுமாயிருப்பது இழிவென்பதை உணர்த்தும் வண்ணமும் இதை இங்கு குறிப்பிட்டோம்.

---

## கடிதம்

### திருவள்ளுவர் வரலாறு

தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனர் இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்குமுன் கடைச்சங்க காலதது உலகஞ்செய்த உயர்தவப்பயனய்த் திருமயிலையில் ஆதிக்கும்பகவனுக்குப் பிறந்து, ஓர் சைவவேளாள மரபில் வளர்ந்து, கல்வியறிவொழுக்கங்களிற் றலைநின்று, மார்க்கசகாயன் என்னும் சைவவேளாளாது அருமைத் திருமகள் வாசுகியம்மையை மணந்து, நெய்தற்றொழிலே எத்தொழிலையும்விடக் குற்றமற்ற தொழிலெனக்கொண்டு, கற்புக்கரசியாகிய அவ்வம்மையாருடன் தமது இல்வாழ்க்கையினைச் செவ்வனே நடாத்தினர் என்ப.

இவர் கடவுள் உயிர் உலகம் என்னும் முப்பொருள் இலக்கணங்களையும் முற்றக்கற்று முழுதுணர்ந்த முனிவராகலின் பண்டைத் தமிழ்மொழி வழக்கிற்கேற்பத் 'திருக்குறள்' என்னும் ஒப்புயர்வற்ற நூலை அறம் பொருள் இன்பமென வகுத்து, குறட்பாவானியற்றி உலகுய்ய அருளினர். இந்நூலை மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் அரங்கேற்றுகையில், சங்கப்பலகை ஏனைய நூல்களைப் புறத்தே தள்ளிவிட்டு இதொன்றையே ஏற்றுத் திகழ்ந்ததாம்.

ஆகவே இதுதனக் கொப்பாயதூல் வேறொன்றின்றித் தனிவளம் நிரம்பிய பெருநூல் என்பது வெள்ளிடை மலைபோற் றெள்ளியதாகும். மேலும் பண்டுதொட்டு இதுகாறும் உலகவழக்கில் நின்றலவும் அமிழ்தினினிய செந்தமிழ் மொழியின முற்கணக்கப்பெற்றுத் தமிழர் தம் உயிர்க்குறுதி பயக்கும் பெருமறையாய்ப் போற்றப்பெறுவதாய், ஓதற்கெளியதாய்ச் சிந்தைக்கும் செவிக்குமின்பம் பயப்பதாய் எச்சமயத்தினர்க்கும் எக்காலத்திற்கும் எந்நாட்டினர்க்கும் பொதுவாய், எல்லாச் சமயத்தினர்க்கும் பொதுவாகிய சொற்றொடர்களினுலே கடவுளைச் சுட்டினும், நுணுகி யாராய்வார்க்கு அது சைவசமயப் பொதுத்தன்மையை விளக்குவதாய், மேலைநாட்டில் வழங்கிவரும் ஆங்கில முதலிய பன்னிரு மொழிகளிலும் ஆரியம் தெலுங்கு முதலிய மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பெற்றுளதாய், நவிறொறு நவிறொறும் நறுஞ்சுவை பயப்பதாய் பயிறொறும் பயிறொறும் பழமையுடன் புதுமை காட்டுவதாய்ப் புறவிருள் போக்கும் உலக ஞாயிறே போன்று விளங்குவதிந்நூல்.

இத்தகையபெருநூலியற்றிய ஆசிரியர், தமது உள்ள மகிழ்விற்குரிய மனைவி தமக்குமுன் உயிர் நீப்பச் சிலகாலமிருந்து பல அருஞ்செயல்களைச் செய்து ஏலேலசிங்கர் முதலிய தமது மாணவர்களை அன்புடன் வாழ்த்தி உலகத்தில் என்றும் அழியாப் புகழ்பரப்பி எல்லாம் வல்ல இறைவன் திருவடிநிழலெய்தினரென்று கூறுப. இன்னும் விரித்தாற் பெருகுமாதலின் அஃதற்கஞ்சிவிடுத்தாம்.

இப்படிக்கு
ஓர் நெய்தற்றொழிலாளன்,
காரணவாய் வடக்கு

---

## அச்சுவேலி யந்திரசாலையில்
## பெற்றுக்கோள்ளக்கூடிய
## வைத்தியப்புஸ்தகங்கள்

| | சதம் |
|---|---|
| சுதேசவைத்தியகுளிகை | 75 |
| செகராச சேரவைத்தியம்-சுரம் சன்னி மூலம் வாதம் ஆதியவைகளின் குணமும் மருந்தும் | 75 |
| அத்துடன் காசக்ஷரோகம் விக்கல் ஆதிய சேட ரோகங்களின் குணமும் மருந்துஞ் சேர்த்து | 1-00 |
| பாலவைத்தியம் டக்றர் சுப்பிரமணியம் செய்த ஆங்கில தமிழ் மருந்துவகையும் குணமும் | 50 |
| அத்துடன் செகராசசேகர பால வைத்தியமுஞ் சேர்ந்து | 60 |
| பிரசவ வைத்தியம—மேற்படி டக்றர் செய்தது | 50 |
| நயன வைத்தியம்—நாகமுனி பராசசேகராதியரின் விதியுஞ் சேர்ந்த பழைய பதிப்பு | 30 |
| பராசசேகர வைத்தியம்—அங்காதிபாதம் நாடிதொந்தம் முதலிய முதலாம் பாகம் | 25 |
| பதார்த்த சாரம் | 1-00 |

### கதா நூல்கள்

| | சதம் |
|---|---|
| பழமொழிப்போதனை | 6 |
| போதனு கீர்த்தனை (அச்சில்) | 25 |
| மேகவர்ணன் (விலைகுறைத்தது) | 1-37 |
| சுந்தரன் செய்த தந்திரம் | 37 |
| தாமோதரன் | 37 |
| அழகவல்லி | 30 |
| விநோதகதாமாலை படங்களுடன் | 50 |
| சன்மார்க்க சதகம் | 12 |

### பொதுப் புஸதகங்கள்

| | |
|---|---|
| தரும புத்திரநாடகம் | 75 |
| உரிச்சொல் நிகண்டு (பழையபதிப்பு) | 30 |
| யாழ்ப்பாண வைபவவிமர்சனம் | 1 00 |
| வையாவசனம் | 25 |

விலாசம்
ச. தம்பிமுத்துப்பிள்ளை
மனேசர்
அச்சுவேலி.

இப்புஸ்தகங்களில் ஒரு ரூபாய்க்குக் குறைவாய் எடுப்பவர்கள் புஸதக விலையுடன் 18 சதம் சேர்த்துத் தபால் முத்திரையாயனுப்பவேண்டும். வி. பி. யாயனுப்பில் 30 சதமசெலவுவரும்

---

# Notice

**GOOD NEWS TO JAFFNA**

**Servant Problem solved at last.**

**If you require reliable Domestic Servants go to:**

**S. M. OLIVER & CO.,**
1st Cross Street,
Jaffna.

**Head Office,**
285, Trincomalie Street,
Kandy.

Agents all over the Island.

---

## விளம்பரம்

### காய்கறிகள்

தாபரபோசனிகளான சைவசமயிகளும் ருசியான போசனம் விரும்பும் மற்றவர்களும் கண்டி-நுவரெலியா மலைநாட்டுக்காய்கறிகள் ஒவ்வொரு சனியும் ஞாயிறும் புதிதாக எங்களிடம் பெற்றுக் கொள்ளலாம். தயவு செய்து முந்தியே ஓடர் செய்யவும் யாழ்ப்பாணக் காய்கறிகளிலும் பார்க்க மலிவு. வந்துபாருங்கள்.

எஸ். எம். ஒலிவர் & கம்பனி·
முதலாங்குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம்

---

## விளம்பரம்

### குடைமார்க்கு ஓடுகள்

பெலமானதும். குளிர்ச்சியானதும் கவர்ண்மேந்து இஞ்சினியர் மாராலே நல்ல திறமென்று ஒப்புக்கொள்ளப்பட்டதுமான ஓடுகள், ஹெங்கிஸ் ஓடுகளென்று சொல்லப்பட்ட ஓடுகள், இப்போ மட்டூருக்கம் பனியாராலே அதேஇடத்திற் செய்யப்படுகின்றன. பொன் விருதுமுத்திரை பெற்றவை. ஓட்டுப் பரிசோதகரினுலே முதற்தரமானவைகளென்று ஒப்புக் கொள்ளப்பட்டவை பாரங்குறைந்தவை. மலிவானவை. கசிவாவது ஒழுக்காவது இல்லாத ஓடுகள். மற்ற ஓடுகள் 100 பாவிக்குமிடத்துக்கு இந்த ஓடுகள் 90 போதியன. சிலாகையும் 100 க்கு 10 லாபம். வந்துபார்த்துச் சோதித்து திருப்தி அடையலாம்.

J. Cherubim & Brother,
Main Street
Jaffna

ஜே. செருபீம் கொம்பனி.
பெரியதெரு.
யாழ்ப்பாணம்.

---

## NOTICE

A VALUABLE CHANCE TO JAFFNA.

All kinds of Fresh up-country vegitables available on Saturdays and Sundays. Book your order early.

**S. M. Oliver & Co.**
1st Cross Street.
Jaffna.

---

## விளம்பரம்

ஒழுங்கான நம்பிக்கையான நல்ல வீட்டு வேலையாட்கள் தேவைப்படுவோர் கீழ்க்காணும் விலாசத்தில்பெற்றுக்கொள்ளலாம். சமையற்காறர், குசினிவேலையாள், பூந்தோட்டக்கூலி, ஆயாள்மார், பீயோன் முதலியவர்களுக்கு உடனே கேட்கவும். கொம்மிஷன் மிகவும் கொஞ்சம்.

எஸ். எம். ஒலிவர் அன்ட்கொம்பனி,
முதலாம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

---

## விளம்பரம்

### தந்தவைத்தியசாலை

### கண்வைத்தியமும்பல்வைத்தியமும்

காலை8 மணிக்கும் 12 மணிக்குமிடையிலும் பின்னேரம் 2 மணிக்கும் 5 மணிக்குமிடையிலும் பரிசோதனை செய்யப்படும். ஞாயிறும் புதனும் வெளியிடங்களுக்குப் போய்ப்பார்த்துக் கொள்ளுவோம் கண்கண்ணுடி, கண்ணுடிப்பிறேம் கம்பிகள். முறிந்துபோனல் உடைந்துபோனல் தயவு செய்து கீழேகாணப்படும் விலாசத்துக்கனுப்புங்கள். அருமையான "குறுக்லென்ஸ" எனுங்கண்ணுடிகளும் பொன், றேல்ட்கோல்ட், வெள்ளி இவைகளாற் செய்யப்பட்ட கண்ணுடிப்பிறேம் கம்பிகளும், சீர்மையிலிருந்து வரவழைத்திருக்கிறேம.

எந்தக் கண் வைத்தியருடைய ஏற்பாட்டின்படியும் கண்ணுடி கவனமாகச் செய்து கொடுக்கப்படும்.

சீர்மை மாதிரியாக பல்லுக்கட்டப்படும். நோவில்லாமற பல்லுப்பிடுங்கப்படும்.

எஸ். சாள்ஸ் பத்திரனு
உத்தரவுபெற்ற தந்த வைத்தியர்,
பெரியதெரு,
யாழ்ப்பாணம்.

---

## விளம்பரம்

### தேக்கு! தேக்கு!!

பர்மா தேக்குவியாபாரக்கம்பனி

அரியாத, அரிந்த தேக்குமாங்கள், பலகைகள், தளப்பலகை, நிலையன்னல்களுக்குரியமரம், கதவுச்சட்டம், தேக்கஞ்சிலாகை எதுவும் தேவையான அளவுகளில் கேட்டவுடனே அனுப்பப்படும். றெயிற் செலவு தள்ளி யாழ்ப்பாண விலைக்குக் குறையக் கொடுப்போம். ஒருமுறை ஓடர்செய்துபார்க்கவும்.

பர்மா தேக்குவியாபாரக் கம்பனி,
207, கிறுண்ட் பாஸ் றேட்,
கொழும்பு

Burma Teak Trading Company,
207, Grand Pass Road.
Colombo

## கடிதங்கள்

(1)

### தெய்வ பக்தி

பக்தி, அன்பு, மெய்வணக்க மென்பன ஒரு பொருட் சொற்கள். உயிரென்னும் பொருள் தாபரவர்க்கங்களுக்கு முண்டு. புத்தி யென்ற பண்பு அனேக சீவபிராணிகளுக்கு முண்டு. ஆனல் பக்தி யென்ற சிறந்த பண்பு மானிடர்க்கேயுண்டு. பக்தியே நமது உயிர்க்குச் சாராம்சம். பக்தியில்லா ஆன்மாவின் இழிவைக் காட்டும் பொருட்டு திருவள்ளுவநாயனர் "கோளில் பொறியில் குணமிலவே யெண்குணத்தான், தாளை வணங்காத் தலை", என்கின்ருர். சகல சமயங்களும தத்தமில் ஈசுர பக்தி சிறந்த தென்பதை யொப்புகின்றன. லௌகீக காரியங்கள் யாவும் அநித்தியமாதலின்; நித்திய வஸ்து வாகிய கடவுளைச் சிந்தித்தல் உசிதமெனபது அறிஞர் துணிபு. இந்தியா தேசத்துப் பெரியோர்கள் பக்தியை மிகவுமுசிதமாக நினைத்தார்கள். எனினும், தற்காலத்தில் எல்லாச் சமயங்களிலுமிருவித பக்தி கலந்து கிடக்கின்றது. அவை ஆசாரபக்தி, இருதயபக்தி யென்பன. இருதய பக்தியே மெய்ப் பக்தியாகும். மெய்ப்பக்தி சன்மார்க்கத்தோடு கலந்துள்ளது. மனிதருக்குக் காருண்யம் காட்டாது கடவுளுக்குப் பக்தி செலுத்துவது சுத்த அபத்தமேயாகும். நல்லொழுக்கமில்லாத பக்தி தண்ணீரில்லாத கிணற்றைப் போலவாம். "ஓதலினன்றே வேதியர்க் கொழுக்கம்" என்றறிவிக்கருத்து நன்கு அமைந்திருக்கின்றது. ஆகவே "வையந்தோறுந் தெய்வந் தொழு" என்ற ஔவை வாக்கைச் சிரமேற் கொண்டொழுக வேண்டியது நம் ஒவ்வொருவரின் பிரமாணமுமாகுக "கற்றதினாலாய பயனென்கொல் வாலறிவன் நற்றாள் தொழா ரெனின்."

இங்ஙனம்,
ஓர்மாணவன்,
வதிரி மிஷன் பாடசாலை

(2)

### பனையும் பணநிலையும்

பிறநாட்டிலுள்ளோர் தந்தேசத்திற் கிடைக்கும் பொருட்களைக்கொண்டு நூதனப் பொருட்களைச் செய்து நம் நாட்டிலுள்ள வயோதிப, வாலிப, பாலியரை மருட்டி நம் நாட்டிலுள்ள பணத்தை எங்களையறியாமலே கைப்பற்றுகிருர்கள். இதற்குக் காரணம் நம் நாட்டிலுள்ள சாதியத்தார் ஒவ்வோர் தொழிலும் ஒவ்வோர் சாதியார் செய்யவேண்டுமென்னுங் கட்டுப்பாட்டை மனதிற் கொண்டதும், நம்சுதேசப் பொருட்களை உபயோகிப்பதற்கேற்ற வழியைக் கையாடாததுமே. எப்படி நம் நாட்டுப் பணத்தைப் பிறநாட்டிற்குப் போகவிடாது தடுப்போமென ஆராய்வாம்.

நம் நாட்டிற்குவரும் சீனி, கற்கண்டு, இனிப்பு வகை ஆதியவற்றால் எத்தொகைப்பணம் பிறநாட்டிற்குப் போகிறதென்றும் இதைத்தடுப்பதற்கு என்ன செய்யவேண்டுமென்றும் எத்தனைபேர் யோசிக்கிருர்கள்? கருப்ப நீரிலிருந்து போதிய இனிப்புகளைத் தாராளமாய்ப் பெறலாம். கருப்ப நீரிலிருந்து பாணி, பனங்கட்டி, கற்கண்டு முதலியவற்றைப் பெற்றுவருகிருர்கள். இத்துடன் சீனியையும் பெறமுயற்சிக்கவேண்டும். சீனியைப் பெறவேண்டுமாயின் இற்றைக்குப் பதினைந்து வருடங்களுக்கு முன் பொலிகண்டியிலும் அதனையடுத்த கிராமங்களிலும் நடத்திய சீனிக்கொம்பனியைப்போல பல தொடங்கியதில் வேற்றுமை பாராது சகலருந் தொழிற்பட்டு அதன் பயனை நாட்டவரடையச் செய்யவேண்டும். சீனியைப் பெற்றுக்கொண்டால் மற்றெவ்விதமான இனிப்பு வகையையுஞ் செய்துகொள்ளலாம். இதனுல் இனிப்பு வகைக்குச் செலவழியும் பணம் பிறநாட்டிற்கேகவிடாது தடுப்பதுடன் தொழிலின்றி யலைந்துதிரியுஞ் சனங்களும் முயற்சிபுரியலாம். கருப்பநீரின் மகிமை நாளுக்குநாள் விளங்கவே கள்ளுங் குறைந்துபோம். மதுவிலக்குச் சங்கத்தின் தொல்லையும் நீங்கிவிடும்.

ஓலையிலிருந்து பாய், பெட்டி, பட்டை முதலிய பன்னவேலைகளைச் செய்து வல்வெட்டி, திக்கம், பொலிகண்டி, வதிரி முதலிய ஊர்களிலும் இன்னும் வேறூர்களிலும் உள்ள சனங்கள் சீவனம் புரிந்து வருகிருர்கள். இன்னும் பிற நாட்டிலிருக்கும், பிள்ளைகளுக்கேற்ற விளையாட்டுச் சாமான்களுக்குப் பதிலாக, கிலுக்குப்பெட்டி, விளையாட்டு வண்டி, விளையாட்டுத்தேர், ஆனைப்பெட்டி முதலியவைகளைச் செய்தும், கடதாசிமட்டைகளிலுந் தோலிலுஞ் செய்துவரும் பாய்க்குக்குப் பதிலாகத் தெல்லிப்பழைக் கைத்தொழிற் பாடசாலையிற் செய்யும் முடிச்சுப்பாய்களை உண்டாக்கியும், நிலத்திற்குப்போடும் புற்பாய்க்குப்பதிலாக மெல்லியதாக ஓலையைவார்ந்து பலவர்ணங்களினுல் பலவகையான பூங்கொத்து, பழக்குலை, செடிக்கூட்டம், பட்சிசாலங்கள், மிருகக்குழு, தமிழ் எழுத்துக்கள் ஆகிய சித்திரங்களை யமைத்துப் பாயாக இழைத்தும் இவைகளை உபயோகித்தும் வருவோமாயின் நம் பணத்தைப் பிறர் கைக்கொள்ளாதபடி தடுக்கலாம்.

நம் வீட்டிற்குவேண்டிய கதவு, யன்னல், கட்டில், கதிரை முதலிய மரப்பெட்டிகளை பனைமரத்திலேயே செய்து கொள்வதினுலும், ஒடியல் மாவுடன் இனிப்பையும் இன்னும் நம் நாட்டு வேறுபொருட்களையும் சேர்த்து பிற இடங்களிலிருந்து தகரப் பெட்டிகளிலடைத்து வரும் "கேக், பிஸ்கற்," முதலிய மாப்பொருட்களைப் போலச் செய்து உபயோகிப்பதினுலும் நம்பணத்தைப் பிற நாட்டார், கைப்பற்றாதபடி தடுக்கலாம். இன்னும் எத்தனையோ வகையாக இப்பனையிலிருந்து கிடைக்கும் பொருட்களை உபயோகப்படுத்திப் பயனையடைவதுடன் பணத்தையும் ஈட்டிக்கொள்ளலாம்.

இவைகளை யெப்படிச் செய்துமுடிக்கலாமெனில் கைத்தொழிற் பாடசாலைகளைக் கிராமந்தோறும் ஏற்படுத்திப் பிற்சந்ததியாராக விளங்கப்போகும் வாலிபபாலியருக்குப் பனையின் பிரயோசனத்தைப் பலவகையாகப் பயன்படுத்துந் தன்மையைச் சாதனையுடன் பயிற்றவேண்டும். நம் நாடு கல்வியில் மேன்மை பெறவேண்டுமென்று விரும்பிக் கிராமந்தோறும் பாடசாலைகளைக் கட்டிவரும் பரோபகார சிந்தையுடையோர்களும், அதிக பணத்தை வைத்துக்கொண்டு இதையெப்படி நல்வழியிற் செலவழிக்கலாமென நினைக்குஞ் செல்வர்களும் முன்னேறும் அவாவுடையவர்களாகிய ஒவ்வொரு கிராமத்தவர்களுஞ் சேர்ந்து ஐக்கிய சங்கங்களைக்கூட்டி காந்தியடிகளின் கொள்கையை நாட்டி சுதேசப்பொருட்களை உபயோகப்படுத்தும் பாடசாலைகளையும் சீனிக்கொம்பனியைப்போன்ற தொழிற்கம்பனிகளையும் கிராமந்தோறும் ஏற்படுத்தி நம் நாடு மகிமையை யடையும் வண்ணம் நன்முயற்சிகளைப் புரியும்படி நம் நாட்டிலுள்ள பெரியோரை வேண்டுகின்றேன்.

எங்களுக்கு என்றும் இடைவிடாது நல்வினைத் தருங் கற்பகதருவாகிய "பனை"யை மதுவுடையகள் ஒன்றினுலும், இகழ்ந்து அழித்துவிடாது வெட்டை வெளியாகவும் பயிர்வகைகள் செய்ய முடியாத தரையாகவும் இருக்கும் இடங்களுக்குப் பனம் விதைகளைப்போட்டு உண்டாக்கிப் பிற்சந்ததியாருக்குச் சுகத்தை நாட்டிப் பணத்தை ஈட்டுவோமாக.

மேல் வதிரி
30-1-31.

ஓர் மாணவன்.

(3)

### சுயபெலம்

மூர்க்க அனுட்டிப்புகளைக்கொண்டு மனுஷன் தன் சுயபெலனையிழந்துவிடப்படாதென்பது தற்கால அறிவுளோர் அபிப்பிராயமாகும். தெய்வம் மனுஷனுக்குக் கொடுத்திருக்கும் அறிவு விரியும் போது தான் மற்றவர்களாற் கட்டப்பட்டிருப்பதை யுணர்வான். இவ்வுணர்வுதான் சுயாதீனத்துக்கு அடிப்படை.

நம் இந்தியா தேசத்தவர் பழைய நூற்களில் இந்தியாவுக்கப்புறமுள்ளவற்றையறியாது தமது அறிவை வேதங்களாகக் கட்டிவிட்டாரென்பது சிலர் கொள்கை. ஆதிசேடசரித்திரம், சத்தசமுத்திர சரிதை, மறுவேடிக்கைகளான கதைகள் இயற்கைக்கு மாறுன உண்மைக்கு நேர்விரோதமான சம்பவிக்கமுடியாத செய்திகளெல்லாம் பல மதங்களிலும் புகுத்தப்பட்டிருப்பதை யுணரும் உணர்ச்சி சுயாதீன உணர்ச்சிகளைப் பிரதிபிம்பிக்கின்றன.

நாம் விசேஷமாய்க் கொண்டாடவிருக்கும் சுவாமி விவேகானந்தரின் அபிப்பிராயங்களை இவ்விஷயத்திலெடுத்துக் காட்டுவாம்.

(1) சுவாமியவர்கள் கும்பகோணத்திற் சொன்னது: நான் அத்வைதத்தையே அதிகமாகப் பிரசங்கித்து வருகிறேனென்று சிலர் குறைகூறக் கேட்டிருக்கிறேன் அது உண்மையே. அத்வைத சித்தாந்தத்தில் அழகும் அன்பும் ஆனந்தமும் உண்டென்பது எனக்குத்தெரியும். இதுவரையில் நாம் அழுதது போதும். அழுதழுது ஆ நெகிழ உருகுவதற்கு இனிச்சிறிதும் சரிப்படாது. நாம் இப்படி நெஞ்சமுருகி நலிந்தே மிருகப்பிராயமாய் விட்டோம். இரும்பை ஒத்த தசைவண்மையும் எஃகை நிகர்த்த நரம்பின் ஆற்றலும் படைத்து எதற்கு மஞ்சாமல் பிரபஞ்சத்தின் அற்புதமான ரகஸ்யதத்துவங்களை உள் நுழைந்தறிந்து அந்தப் பிரயத்தனத்தில் கடலின் அடியிற்போகவேண்டிவந்தாலும் உயிரையே விடவேண்டிவந்தாலும் எதையும் லட்சியம் செய்யாமல் காரியத்தைச்சாதிக்கும் மகாதீரர்களே நமது நாட்டிற்கு இப்பொழுது வேண்டியவராயிருக்கிருர்கள். அத்தகைய நிலைமையானது ஏற்பட்டு நிலைபெற்று உறுதிப்படுவதற்கு அத்வைதத்தினுலே போதிக்கப்படுவதான எல்லாம ஒரே ரூபமென்னும் தத்துவத்தை யறிந்து அதை யனுசரிப்பதினுலேயே சாத்தியமாகும். உங்கள் புராணங்களிற் சொல்லியுள்ள முப்பத்து மூக்கோடி தேவர்களிடத்தும், அயல் நாட்டாரால் காலாகாலங்களிற் கொண்டுவரப்பட்ட மறுதேவர்களிடத்தும் உங்களுக்கு நம்பிக்கையிருந்து உங்களில்மாத்திரம் உங்களுக்கு நம்பிக்கையில்லையென்ருல் உங்களுக்கு மோட்சமேயில்லை. ஆகவே முதலில் உங்களிடத்திலேயே நம்பிக்கையையுங்கள். அந்தப்பக்தியை ஆதாரமாய்க்கொண்டு பலசாலிகளாகவிருங்கள். அதுதான் நமக்குவேண்டியது. அற்பத்தொகையினரான அயல்நாட்டார் எவருமே நம்மைச் சென்ற ஆயிரம் ஆண்டுகளாக ஆண்டு நடத்தி வருவதற்குக்காரணமென்ன? அவர்களுக்கு தம்முடைய சுயபலத்தில் நம்பிக்கையிருந்தது. நமக்கு அந்த நம்பிக்கையே இல்லை என்பதுதான்காரணம்.

இக்காலத்திலே சனங்கள் மதமென்னும் வியாசம் வைத்துக்கொண்டு தமக்குள்ள லௌகீக சன சங்க சம்பந்தமான ஆசையையோ அரசாங்க சம்பந்தமான அபீஷ்டத்தையோ ஈடேற்றிக்கொள் ளப்பார்க்கும் நிலையிலிருக்கிருர்கள் என சுவாமிகள் மோட்ச மூலவரைபற்றிய வியாசத்தில் எழுதியிருக்கிருர்கள். எழுதியிருக்கிற எந்த வேதப்பகுதியையாவது ஆதாரமாகக்கொண்டு சுயாதீன உணர்ச்சிகளை ஸ்தாபிக்க முடியவேமுடியாது. நமது நாட்டிலுண்டாயிருக்கும சமத்துவ சுயாதீன உணர்ச்சிகளுக்கு ஆசௌசதீபிகை மனுஸ்மிருதி ஆகியவைகளை அஸ்திபாரமாக்கி சுயாதீனபடியில் ஏறலாமென்பது டைனமெற் என்னும் வெடிமருந்துகளை யஸ்திபாரத்திற் போட்டு உயர்ந்த மாளிகைகட்ட ஆசிப்பதுபோலாகும்.

யாழ்ப்பாணத்திற் சுவாமிகள் சொன்னவை:- "நீங்கள் உங்கள் பிள்ளைகளை இளமைமுதற் திடகாத்திர சம்பன்னர்களாக்கிக்கொண்டுவாருங்கள். பலவீனத்தன்மையையும் சீவனற்ற வெறுங்கருமங்களையும் அவர்களுக்குக் கற்பித்துக் கொடாதீர்கள்' என்பதாகும். இவை எந்தச்சாதியத்துக்கும் பொதுவானவை. சீவனற்ற வீண்கருமங்களே மதங்களுள் விருந்து மனுஷரை முட்டுப்படச்செய்கின்றன. மனத்தாழ்மையுள் சொல்லப்பட்ட வாக்குகளிற் பிழை கலப்பதில்லை. உலகத்திலுள்ள பாமர சனங்களுக்குள்ளே வஞ்சகமனத்தினர் சுயபெலமல்ல பிறர்பலமே பெரிதெனப் புகட்டியதுடன் "நீங்கள் மனுஷ பிறவிகளேயல்லீர்" என்று கட்டிவந்திருக்கிருர்கள் பலநூற்றுண்டுகளாய் இப்படியடக்கி வைக்கப்பெற்றதன்பயனுக இவர்கள் மிருகப்பிராயமாய்விட்டனர். தம்மை மனுஷரல்லவென்றும் சமத்துவம் அற்றவரென்று மென்னும் நிலையில் யாழ்ப்பாணத்திற் சுயபெலமற்ற சகோதரங்கள் மூளையும் வாயுமின்றி இருகால் விலங்கினத்திலிருப்பது நூதனமல்ல நமது சகலவித துன்பங்களுக்கும் குறைபாட்டுக்குங் காரணர் நாமேயன்றி வேறொருவருமில்லை. உயர்குடிப்பிறப்பும் செல்வச்செருக்குமுடையவரென்று நம் இளையசகோதரரைக் காலின்கீழ்ப்போட்டு வருத்திஞேம். இதால் நம்மில் ஒருபகுதியான இளையோர் அல்லது தாழ்ந்தோர் ஆதாவற்று வலியற்று தாம் மானிடசென்மமெனக்கூற வாயற்று எண்ண மூளையற்றுப் போயிருக்கிருர்கள்.

இவர்கட்கு உதவி செய்வதே விசேஷமென நினைக்க பெரியவர்கள் வெட்கமுறுகிருர்களோ அல்லது பக்கத்து வீட்டாருக்கு, தம்மை மதிக்கக்கூடியவரென்று தாம் நினைப்பவர்களுக்குப் பயப்படுகிருர்களோ அறியோம். இவர்களை உய்விக்க உண்டாகும் எதையும் மதக்கொள்கை சைவப்பிரமாணம் கிறிஸ்த இந்துஉடன்படிக்கை என்று சொல்லி மழுக்கிவிடப்பார்க்கின்ருேமே! இது சுயபெலமில்லாதவர்களை இன்னுஞ் சுயபெலமற்றவராக்கி விடுவதேயாம். இதாற் தமிழ்ச்சாதி அழியும்.

சமீபத்தில் புடவை வியாபாரகளான சீனயப்பானிய பொட்டணி வியாபாரிகளைக் கவனியுங்கள். அவர்கள் உடுப்பென்ன? நடப்பென்ன? உடையென்ன? சாப்பாடென்ன? அவர்கள் குளிப்பு முழுக்கு எப்படி? அவர்கள்தங்கு துறைகள் எங்கே? இவற்றைக் கவனித்த நம்பெரிய மனமற்ற மதப்பழங்கள் உளரா? இவர்கள் தீண்டப்படக்கூடியவரா? இவர்கள் எச்சாதியார்? அனுலோமரா பிரதிலோமரா? இவர்களை யாழ்ப்பாணப் பெரியோர் தங்கள் நாய்க்குட்டிகளைப்போலச் சன்மானிப்பதும், தம் சொந்தச் சகோதரரை நாயினுங் கடையரென எண்ணி ஒதுக்குவதும் எம்மனம் படைத்தோ என்பதை யோசிக்கவேண்டியதாயிருக்கின்றது.

வேதம் கற்பிப்பதுபோல உங்கள் சரீர அம்சங்களான பிரம்மபாகங்களை பிரம்மமெனும் அகண்ட பரிபூரண சொரூபத்தின் அம்சங்கள்தான் என்பதை மறக்கலாமா? அல்லது மறைக்கலாமா? இதுதானு தெய்வநீதி இதுதானு யாழ்ப்பாண நீதியென்று கேட்கிருேம்.

மதக்கோட்பாட்டையும் பழைய கதைகளையும் இயற்கைக்கும் மூளைக்கும் ஒவ்வாத உபயோகமற்ற மௌட்டீக ஏற்பாடுகளையும் எடுத்து அனுசரிக விருத்தியுரை யெழுதாது மரியாதையான உயிருள்ள சீவியத்துக்கு ஒத்த மனதுடன் முன் செல்வதே மனுஷதன்மையாகும்.

'நன்மை கடைப்பிடி"


UMBRELLA BRAND TILES

Undoubtedly the best in the market
Largely patronised by
Government Engineers.

World famed "Henke's" Tiles. Now Manufactured by Madura Co., Ltd. Give the best protection from Sun, Rain, Fire.

Have stood the test of Experts, Winning Gold Medals and declared best, Special Features: Lightest, Cheapest and non-Dripping Tiles.

Glass tiles give best interior illumination. Owing to larger surface reduces cost of tiling by 10 per cent. Come—See—Test and satisfy yourself.

**J. Cherubim & Brother,**
**Sole Agents**
Main Street, Jaffna.

SAVE MONEY!

AND MAKE ALL YOUR PURCHASE FROM US.

We are Direct Importers of Portland cement. Barbed Wire, Iron Bars. Expanded Metal, Galvanized Corrugated Roofing Sheets, Galvanized Plain Sheets. Asbestos Cement, Corrugated Roofing Sheets and Flat Sheets for ceiling and partitions and all other building materials.

We import all Hardware goods direct from England and the Continent and are therefore able to offer better prices than Local Dealers.

Please make your enquiries either from our Branch Office,

N. VAITILINGAM & Co.
Grand Bazaar,
Jaffna,
or from us

N. VAITILINGAM & Co.
Estate Suppliers & Hardware Merchants,
31, Third Cross Street,
Colombo.

Telephone, 2266
Telegrams:—"Envaitilin".

Dental Surgery

S. CHAS. PATIRANA

LICENSED DENTIST & MANUFACTURING OPTICIAN
MAIN STREET, JAFFNA

CONSULTATION HOURS, 8 A. M. TO NOON —2 P. M. TO 5 P. M (SUNDAYS AND WEDNESDAYS BY SPECIAL APPOINTMENTS.

When you break your spectacle frames, spect arms or lense of any pattern, please send them to the above address. They will be repaired accurately and promptly and also we have large supply and great variety of the most desirable kinds and styles of Crooke's lenses and best quality Rolled Gold and nickeled silver frames and other mountings directly imported from Europe.

Our charges are always uniform and reasonable and all eye doctors' prescription will be made carefully and accurately.

THE WELL-KNOWN

HOUSE FOR BRASS GOODS

All Reputable Builders and Contractors buy their supply from us. BRASS LOCKS, PADLOCKS, BRASS HINGES, BRASS BOLTS AND BRASS SCREWS

from

**Leading English, German and continental Makers**

**OUR QUALITY IS OUR GUARANTEE**

We have studied local demands and requirements and know as specialists should, what articles would suit out our numerous patrons.

**Our experience and knowledge is at their service FREE**

We import "PYRAMID BRAND" brass beds
made by the world celebrate makers
Both in point of quality and value
We can satisfy you

**JUST BUY ONE AND SEE IF WE CANNOT.**

A. L. M. ABDUL LATIFF,
Nos. 3,16, 130,, 3rd Cross Street,
Colombo.
PHONE, 1113. Telegrams "ALMAL".

விளம்பரம்

கொழும்பு மூன்ருங்குறுக்குந்தெருவில் இருக்கும் எங்கள் சாப்பில்

வகைவகையான இரும்புச் சாமான்கள் பித்தளைச் சாமான்கள், இரும்புக்கம்பிகள், பித்தளைக்கம்பிகள், ஈயக்கம்பிகள், மண்வெட்டி, பிக்கான்வகைகள், அலவாங்குகள். இரும்புப்பூட்டுவகைகள், பித்தளைப்பூட்டுவகைகள், லாச்சிப்பூட்டுகள், பெட்டிப்பூட்டுகள், எண்ணைவகைகள், மைவகைகள், வாணிசுவகைகள், இரும்புக்கட்டில்கள், பித்தளைக்கட்டில்கள், பிணைச்சல்வகைகள், திருங்குவகைகள், வீட்டுக்கட்டிடத்துக்கு வேண்டிய புதுவிதமான சகலதினிசுகளும் மிக உயர்ந்த இனமான குறைந்த இனமான சகல சாமான்களும் சில்லறையாகவும் தொகையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணத்திலுள்ள கடைகளுக்குங் கொந்திறுத்துக் காரருக்கும் கொடுக்கும் விலையில் சில்லறைக்கு உடனே அனுப்பிவைப்போம்.

ஒருமுறை எழுதிப்பாருங்கள்

அமெரிக்கா, இங்கிலாந்து, சேர்மனி, யப்பான் முதலிய இடங்களிலிருந்து நேரே அழைப்பிக்கிருேம்.

சகலவிதமான கண்ணுடிகளும் நிறக்கண்ணுடிகளும் வேண்டிய இனத்தில் வேண்டிய அளவில பெற்றுக்கொள்ளலாம். ஓடர்செய்த அடுத்த நாளில் சாமான்கள் கையிலிருக்கச்செய்வோம்.

விலாசம்.

ஏ. எல். எம். அப்துல் லாத்திவ்
3. மூன்ருங்குறுக்குத்தெரு,
கொழும்பு.


Printed by Mr. C. K. Yesuthason at the A. C. M. Press, Tellippalai, Edited and published by Mr. Joel Paul, Building Contractor, (Secretary, the Jaffna Depressed Tamils' Service League) on behalf of the Service League at Tellippalai.